## நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் 74-வது குடியரசு தின விழாக் கொண்டாட்டம்

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 74-வது குடியரசு தின விழா 26.01.2023 அன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் பி. எஸ். கே. செங்கோடன் தலைமை தாங்கி மூவர்ணக் கொடியினை ஏற்றினார். அவர் தன் உரையில் குறிப்பிடுகையில் உலகின் வலிமையான குடியரசு நாடாக திகழும் நம் இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது என்பது நம் நாட்டின் மக்களுக்கு கிடைத்த பெருமை என்றார்.

சிறப்புரை வழங்கிய கல்லூரி செயலர் கே. நல்லுசாமி தன் உரையில் குறிப்பிடுகையில் இயற்கை வளம் மிக்க நாடு நம் இந்தியா. ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டபோது நம் நாட்டின் இயற்கை வளங்களை சுரண்டினாலும், உழைப்பு என்ற பலத்தால் நாம் மேன்மேலும் உலக அளவில் முன்னேறி வருகிறோம் என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய டிரினிடி சிபிஎஸ்சி பள்ளித் தலைவர் பி.ஆர்.எஸ். பழனிசாமி தன் உரையில் குறிப்பிடுகையில் உழைப்பு மற்றும் திறமை இவைகள் தான் நம்மை முன்னேற்றும், நம் நாடு பொருளாதார அளவில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றால் அதற்கு நம் நாட்டு மக்களின் செயல் திறன் ஒன்றே காரணம் என்றார்.

இந்நிகழ்வில் கல்லூரி செயல் இயக்குநர் அருணா செல்வராஜ், முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன், என்எஸ்எஸ் அலுவலர்கள் எம். சசிகலா, எஸ். ஜெயமதி, இளைஞர் செஞ்சிலுவை சங்க அலுவலர் ஆர். சாவித்திரி, துணை அலுவலர் வீ. கலைவாணி, நிர்வாக அலுவலர் என்.எஸ். செந்தில்குமார் உட்பட பேராசிரியப் பெருமக்கள் மற்றும் திரளான மாணவியர் பங்கேற்றனர். இந்நிகழ்வினை கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தின.

26/01/2023

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.